

திருவண்ணாமலை முன்னாள் நகர தி.மு.க. செயலாளர் டி.என்.பாபு அவர்களின் 23வது நினைவு நாளை முன்னிட்டு, அவரது நினைவிடத்தில் முன்னாள் அமைச்சரும், கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், பெ.சு.தி.சரவணன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், நிர்மலாவேல்மாறன், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம், காலேஜ் ரவி, குட்டி புகழேந்தி, ந.சீனுவாசன், பா.வினோத்குமார் உட்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை முன்னாள் நகரச் செயலாளர்

டி.என்.பாபு 23வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் - உணவு வழங்கல்!

சட்டமன்ற கழகக் கொறடா எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

திருவண்ணாமலை, நவ.4-

திருவண்ணாமலை முன்னாள் நகர செயலாளர் டி.என்.பாபு அவர்களின் 23வது நினைநாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. அமைதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு, முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர் பொதுமக்களுக்கு உணவுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

02.11.2026 திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு திருவண்ணாமலை - கலைஞர் சிலை அருகில் இருந்து திருவண்ணாமலை முன்னாள் நகர செயலாளர் டி.என்.பாபு அவர்களுடைய 23வது நினைவுநாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

அமைதி ஊர்வலத்திற்கு சட்டப்பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர் ப்ரியா விஜயரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாநகர செயலாளர் ப.கார்த்திவேல் மாறன் செய்திருந்தார்.

அமைதி ஊர்வலம் கலைஞர் சிலை அருகில் இருந்து ஈசான்யத்தில் உள்ள டி.என்.பாபு அவர்களின் நினைவிடத்தை சென்றடைந்தது. அங்கு அவரது நினைவிடத்தில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கழக கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். முன்னாள் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மற்றும் கழக முன்னோடிகள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் மெய்யூர் சந்திரன், மாநில அமைப்பு சாரா தொ.மு.ச., ஏ.ஏ.ஆறுமுகம், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, கு.கணேஷ், பாலமுரளிகிருஷ்ணா, இரா.கார்த்திகேயன், கற்பகம் சரவணன், பகுதி செயலாளர்கள் குட்டி க.புக ழேந்தி, ந.சீனுவாசன், பா.ஷெரீப், அ.கோவிந்தன் மாநகர மேயர் நிர் மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், நகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, இல.குணசேகரன், கோல்டு.எஸ்.பிரபு, ஹக்கிம்சேட், மாவட்ட துணை அமைப்பாளர்கள் எஸ்.கண்ணதாசன், இரா.சீனுவாசன், டி.என்.பி.வினோத்குமார், ஆ.தே.முருகையன், ஏ.எம்.பாஷா, கற்பகம் பாண்டியன், ஏ.எம்.பாஷா, டி.எம்.வெங்கடேசன், இராயல்.தியாகு, இரா.ராஜசேகர்,

சுனாபேகம், பச்சையம்மாள் யேசு, காமாட்சிபாண்டியன், மாநகர அமைப்பாளர்கள் மண்டி ஆ.பிரகாஷ், மு.குணா (எ) குணாளன், ஆ.மோகன்ராஜ், வழக்கறிஞர் கிருஷ்ணமூர்த்தி, வேங்கிக்கால் பரத், வட்ட செயலாளர்கள் டி.என்.மனோகரன், டி.எல்.எம்.விநோத்குமார், செ.எழில்மாறன், கு.குமார், எஸ்.கே.டி.வீரா, கோபிசங்கர், இரா.ராஜாமணி, சென்னை சுரேஷ், எஸ்.நாடிமுத்து, ஏ.கே.கஜபதி, கோ.தியாகராஜன், மு.ஆனந்தன், சூரியபிரகாஷ், சாம்.ரகுநாத், அலிமுகமது, தென்மாத்தூர் கண்ணன், பா.தீபன், ப.மணி (எ) விக்னேஷ், சக்தி, அருள் ஜோதி உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக அமைதி ஊர்வலம் தொடங்கும் முன், டி.என்.பாபு நினைவு நாளை முன்னிட்டு 500 பேருக்கு முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் அறுசுவை உணவு பொட்டலங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.



முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தஞ்சை மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான மறைந்த எம்.இராமச்சந்திரன் அவர்கள் உடல் மீது கழக இளைஞரணி செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்று மலர்மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

த.வெ.க. ஆட்சியில் கோவை மாவட்டத்தில்

பழுதான சாலைகளை சீரமைக்க நிதியின்றி தவிக்கும் நெடுஞ்சாலைத்துறை !

போக்குவரத்து நெரிசல் – மக்கள் அவதி!

கோவை, நவ.4-

கோவை மாவட்டத்தில், மாநில நெடுஞ் சாலைத்துறை, திட்டப் பிரிவு, நபார்டு பிரிவு போன்றவற்றில் ஆண்டிற்கு 70க்கும் மேற்பட்ட திட்டப்பணிகள் நடத்தப்பட்டு வந்தது. தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் விளைவாக த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் பெரும்பாலான பிரிவுகள் இணைக்கப் பட்டது. கோட்டம் 1, 2 என பிரிக்கப்பட்டது. அலுவலக ரீதியான நடைமுறை மாறியமைக்கப் பட்டது. அதன் பின்னரும் நடப்பாண்டிற்குரிய திட்டப்பணிகள் சொற்ப அளவில் கூட துவங்கப் படவில்லை. மாவட்டத்தில் புதிய திட்டப்பணிகள் துவங்கப்படாமல் இருப்பதால் சாலை கட்டுமானங்கள் மேம்பாடு அடைய முடியாத நிலைமை இருக்கிறது.

மாவட்ட அளவில் வாகனங்களின் பெருக்கம், ரோடு பழுது பிரச்சினை அதிகமாக இருக்கிறது. இரு வழிப் பாதையை நான்கு வழிப் பாதையாக மாற்ற வேண்டும், நான்கு வழிப் பாதையை ஆறு வழிப் பாதையாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை நீண்டகால மாக இருக்கிறது. இது பரிசீலிக்கப்படவில்லை. மாவட்ட சாலை, கிராம பகுதி சாலைகளை மேம்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. மருதமலை ரோடு விரிவாக்கம் தவிர, வேறு எந்த வேலைக்கும் மாநில நெடுஞ்சாலைத்துறை ஒப்புதல் தரவில்லை.

பீளமேடு, கோல்டு வின்ஸ், நீலாம்பூர் மேம்பாலம் விரிவாக்கம் குழப்ப நிலையில் கிடக்கிறது. கோவை மாநகராட்சி சார்பில் பாதாள சாக்கடை, குடிநீர் பணிக்காக தோண்டப்பட்டு நாசமான சாலைகளை சீரமைக்க 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த பணியும் துவக்கப் படவில்லை. இந்த நிலையில் மழை காரணமாக, பாதிப்பு மேலும் அதிக மாகிவிட்டது.

மாவட்ட அளவில் இதுவரை 17 நாட்கள் மழை பெய்துள்ளது. இதில், 200 கி.மீ முதல் 250 கி.மீ தூரம் வரை நெடுஞ்சாலைத்துறையின் சாலைகள் பள்ளமாகி தார் தளம் மோசமாகி விட்டது. சில இடங்களில் பாலங்களும் சேதமாகி விட்டது சாலை பணிகளுக்கு பல கோடி ரூபாய் நிதி எதிர் பார்த்து நெடுஞ்சாலைத் துறையினர் காத்திருக்கின்றனர். ஆனால், நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

கோவை மாநகரம், தொழில் நகர அந்தஸ்தில் இருந்த போதிலும், சாலைகள் கட்டமைப்பில் முக்கியத்துவம் தரப்படவில்லை. சாலைகள் சிதைந்து வருவதால், தொழில் துறையினர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். உற்பத்தி செய்த பொருட்களை பாதுகாப்பாக கொண்டு செல்ல முடியாத நிலை இருக்கிறது.

நெடுஞ்சாலை ஆணையகத்தின் மதுக்கரை நிலாம்பூர் பைபாஸ் சாலை விரிவாக்க பணியும் துவங்கப்படவில்லை. இது திட்ட அறிக்கையுடன் முடங்கி கிடக்கிறது. தினமும் மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் தர மற்ற நெரிசல் மிக்க சாலைகளால் விபத்துக்கள் அதிகமாகி வருகிறது. தொழில் நகரம் விபத்து நகரமாக மாறிவிட்டது. சாலை பராமரிப்பு பணி, சீரமைப்பு நடத்த முடியாமல் நெடுஞ்சாலைத் துறை தள்ளாடி வருகிறது. சாலை கட்டமைப்பை மேம்படுத்த போதிய நிதி ஒதுக்கினால் மட்டுமே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் என்கிறார்கள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள்.

நேபாளத்தில் ஹெலிகாப்டர் விபத்து!

காத்மாண்டு நவ.4-

நேபாளத்தின் எவரெஸ்ட் சிகரப் பகுதியில் இரு ஹெலிகாப்டர்கள் தரையிறங்க முயன்றபோது, அவற்றின் இறக்கைகள் காற்றில் ஒன்றுடன் ஒன்று மோதி பயங்கர விபத்துக் குள்ளானதில், இந்தியச் சுற்றுலாப் பயணி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் இருந்து சுமார் 250 கி.மீ தொலைவில் உள்ள சோலுகும்பே மாவட்டத்தின் பெரிச்சே என்ற இடத்தில் உள்ள ஹெலிபேடில், இன்று காலை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

ஃபிஷ்டெயில் ஏர்' மற்றும் 'ஏர் டைனாஸ்டி' ஆகிய இரு தனியார் நிறுவனங்களின் ஹெலிகாப்டர்கள் பெரிச்சே ஹெலிபேடில் ஒரே நேரத்தில் தரையிறங்க முயன்றுள்ளன.

அப்போது, எதிர்பாராத விதமாக இரு ஹெலிகாப்டர்களின் சுழல் இறக்கைகளும் ஒன்றுடன் ஒன்று பலமாக மோதிக்கொண்டன.

இந்த அதிர்ச்சியூட்டும் காட்சிகள் அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி, தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

சட்டம் - ஒழுங்குச் சீர்கேடு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, விலைவாசி உயர்வைக் கண்டித்து நாமக்கல்லில் தி.மு.க. மகளிர் அணியினர் கண்டன ஆர்ப்பாட்டம்!

நாமக்கல், நவ 4-

தமிழ்நாட்டில்சட்டம் ஒழுங்குச் சீர்கேடு, பெண் குழந்தைகளின் பாது காப்பு மற்றும் விலைவாசி உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளைக் கண்டித்து, நாமக்கல்லில் தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், கழகத் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் ஆலோசனையின் படியும், நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஷ் குமார், நாமக்கல் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி, கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.ராணி ஆகியோர் வழி காட்டுதலின்படி நாமக்கல் பூங்கா சாலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் ஜோதிலட்சுமி வரவேற்புரை ஆற்றினார். மகளிர் தொண்டரணி அமைப்பாளர் வி.கௌரி தலைமை தாங்கினார். மாநிலக் கல்வியாளர் அணித் துணைச் செயலாளர் சுதா ஜெயக்குமார், நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி, தொண்டரணி அமைப்பாளர் ராதிகா சக்திவேல், நகர்மன்றத் தலைவர்கள் இராசிபுரம் கவிதா சங்கர், திருச்செங்கோடு நளினி சுரேஷ், ஜோதி, ராதிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக அவிநாசி மருத்துவர் கோகிலா மணி சிறப்புரையாற்றினார். போராட்டத்தில் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணியினர் மற்றும் விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட பொதுமக்களும் கலந்துகொண்டு தமிழ்நாட்டில் நிலவி வரும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, விலைவாசி உயர்வைக் கண்டித்து தவெக அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பினர்.

இப்போராட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட துணைச் செயலாளர் ராணி பெரியண்ணன், மேற்கு மாவட்ட துணை செயலாளர் சாந்தி, நாமக்கல் கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் வழக்கறிஞர் த.கீதாலட்சுமி, வலைதள பொறுப்பாளர் இ.சிலம்பரசி, பாப்பாத்தி, மலர்விழி சம்பத், மகாலட்சுமி, அகிலா, செல்வி போஸ், கனகம், லதா, ஜெயசுதா, ராஜாராணி, சித்ரா சரவணன், பூவிழி, சரஸ்வதி, தங்கம், தவமணி, கீதா, முல்லை பூங்கொடி, பொன்னம்மாள், பாப்பாத்தி,

மேற்கு மாவட்ட நிர்வாகிகள் அம்பிகா பாண்டியன், ஜெயதேவி, மகேஸ்வரி, சித்ரா, கலா, கயல்விழி, ராதாமணி, மேனகா, வசந்தா, அருள்செல்வி, தேன்மொழி, பாவாயி ஜெயமணி, சந்திரா, இந்திராணி சுமதி திலகவதி செந்தமிழ் செல்வி சினேகா மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டதையொட்டி, முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.